


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2025) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முழுவதும் 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதையொட்டி நேற்று (1.3.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கான சேர்க்கை ஆணையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்தர மோகன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள் முனைவர் கண்ணப்பன், முனைவர் பழனிச்சாமி, முனைவர் பூ.ஆ, நரேஷ், அரசு உயர் அலுவலர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு முழுவதும் 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதையொட்டி நேற்று (1.3.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கான சேர்க்கை ஆணையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்தர மோகன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள் முனைவர் கண்ணப்பன், முனைவர் பழனிச்சாமி, முனைவர் பூ.ஆ, நரேஷ், அரசு உயர் அலுவலர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஈரோடு மாவட்டம், தொண்டங்கோப்பு மற்றும் கரும்பாறை மலைவாழ் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.



சென்னை – அண்ணா அறிவாலயம் – 'கலைஞர் அரங்கில்' தொண்டர்களின் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்ட கழகத் தலைவர் அவர்களுக்கு, திருவண்ணாமலை நகர்மன்ற முன்னாள் தலைவர் இரா. திருமகன் 250 கிலோ எடை கொண்ட பித்தளையில் செய்யப்பட்ட சிங்க உருவச் சிலையை வழங்கினார்.

# எனது வளர்ச்சிக்குக் காரணமே தமிழ்நாட்டு மக்கள்தான்!

முதல்வர் உரை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

நம்முடைய பிரதிநிதித்துவத்தைக் குறைக்க நினைக்கிறார்கள்... அதனால்தான் முன்கூட்டியே இந்தப் பிரச்சினையை நாம் இப்போது கையில் எடுத்து இருக்கிறோம்.

**பிரதமர் மோடி எழுத்துப்பூர்வமாக உறுதிமொழி தர வேண்டும்!**

ஏற்கெனவே, பிரதமர் மோடி புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்தபோது, என்ன சொன்னார்? எதிர்காலத்தில் எம்.பி.க்களின் எண்ணிக்கை அதிகமாகப் போகிறது என்று பேசினார்... ஒன்றிய உள்துறை அமைச்சர் என்ன சொன்னார்? மகளிர் இடஒதுக்கீடு மசோதா கொண்டுவந்தபோது, 2024 தேர்தலுக்குப் பிறகு தொகுதி மறுவரையறை இருக்கும் என்று சொன்னார். நாம் இப்போது கேள்வியெழுப்பிய பின்னர், இப்போது என்ன சொல்கிறார்கள்? பொத்தாம் பொதுவாக, தமிழ்நாட்டுக்குத் தொகுதிகள் குறையாது என்று சொல்கிறார்கள்! மற்ற மாநிலங்களுக்கு அதிகரிப்பார்களா? தெரியாது!

நாங்கள் கேட்கும் கேள்வி, நாட்டின் வளர்ச்சிக்காக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்கள் ஏன் பாதிக்கப்பட வேண்டும்? "மற்ற மாநிலங்களுக்கு மக்கள்தொகை அடிப்படையில் அதிகரிக்காது" என்று ஏன் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? முன்னாள் பிரதமர்கள் நேரு அவர்களும் – வாஜ்பாய் அவர்களும் உறுதி கொடுத்தது போன்று, பிரதமர் மோடி ஏன் உறுதி கொடுக்க மாட்டேன் என்கிறார்?

பிரதமர் அவர்களே... எங்களுக்கு எழுத்துப்பூர்வமாக உறுதி கொடுங்கள்! "இப்போது இருக்கும் மக்கள் தொகை அடிப்படையில், தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப் படாது... 1971 மக்கள் தொகை அடிப்படையில், தமிழ்நாட்டுக்குரிய பிரிதிநிதித்துவம் கிடைக்கும்! தமிழ்நாட்டுக்குப் எந்த பாதிப்பும் ஏற்படாது!" என்று உறுதி கொடுங்கள். இன்றைக்குத் தமிழ்நாடு எழுப்பியிருக்கும் இந்த உரிமைக் குரலை, தெலங்கானா-கர்நாடகா – எதிரொலித்துக் கொண்டு இருக்கிறார்கள்... அவர்களுக்கு என்னுடைய நன்றி! மற்ற மாநிலங்களும் நியாயத்துக்காக வும் – உரிமைக்காகவும் குரல் கொடுக்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்!

இன்றைக்கு நாம் விழிப்புடன் இருந்து, நம்முடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவில்லை என்றால், எதிர்காலத்தில் இனி ஒருபோதும் தமிழர்களின் கையில் அதிகாரம் வராது! தமிழர்களின் சொல்லுக்கு மரியாதையே இருக்காது! அதனால்தான், காலையில் நான் வெளியிட்ட வீடியோவில், உடன்பிறப்புகள் எல்லாம், இந்தச் செய்தியை அனைவருக்கும் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்...

இங்கே கூட்டணிக் கட்சியினர் அனைவரும் வந்திருக்கிறீர்கள்... நீங்கள் இது சம்பந்தமாகத் தொடர்ந்து கூட்டம் போட்டுப் பேசி, இது பற்றிய விழிப்புணர்வைக் கடைக்கோடி மனிதருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்! மார்ச் 5–ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு நான் அழைப்பு விடுத்திருக்கிறேன்... அதில் கட்சிப் பாகுபாடு இல்லாமல் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்... பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க. கலந்து கொள்ளும் என்ற செய்தி வந்திருக்கிறது. மகிழ்ச்சி!

சிலர், கலந்து கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள்... நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், இன்றைக்கு பா.ஜ.க.வை மகிழ்விக்க நீங்கள் செய்யும் சுயநல அரசியலால் தமிழ்நாட்டுக்குத் தீங்குதான் ஏற்படும்! பா.ஜ.க.வை நம்பி சென்றவர்கள், அவர்களின் தேவை தீர்ந்தவுடனே மற்ற மாநிலங்களில் என்ன ஆனார்கள் என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்...

**நமக்கான அடையாளத்தை இழக்காமல் காப்போம்!**

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கும் பா.ஜ.க.வின ருக்கும் சேர்த்து நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்த விவகாரத்தில் தமிழ்நாட்டுக்குத் துணையாக நில்லுங்கள்... தயவு செய்து உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யாதீர்கள்! நாம் அனைவரும் ஓரணியில் இருக்கிறோம் என்று மற்ற மாநிலங்களுக்குக் காட்ட வேண்டும்! அதுமூலமாகத்தான் வர இருக்கும் ஆபத்த தடுத்து, நம்முடைய உரிமையை வென்றெடுக்க முடியும்! வென்றெடுத்தால்தான், எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும்! நம்முடைய குழந்தைகளின் எதிர்காலத்துக்காக நாம் இதைச் செய்தே ஆக வேண்டும்! இதில் தவறிவிட்டோம் என்றால், நமக்கான அடையாளமே இல்லாமல் போய்விடும்!

எனவே, நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்... நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒரே அணியில் இருப்போம்! தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாப்போம்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

**நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன்... இது, நான் நினைத்துப் பார்க்காத இடம்... இது, நான் நினைத்துப் பார்க்காத உயரம்! இந்த இடத்துக்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தவர்கள், உடன்பிறப்புகளான நீங்கள்தான்! கோபாலபுரம் நான் பிறந்த இடமாக இருந்தாலும் – தமிழ்நாடு முழுவதும்தான் என்னை வளர்த்தது! ஏன் என்றால், 60 ஆண்டுகாலமாகத் தமிழ்நாட்டில் கிழக்கு – மேற்கு, வடக்கு – தெற்கு, கிராமம் – நகரம், குறுக்கு – நெடுக்கு, வெயில் – மழை, இரவு – பகல், பசி – தூக்கம் பார்க்காமல், ஓடியாடி உழைத்து, கருப்பு – சிவப்புக் கொடியை ஏற்றியதால்தான், கோட்டையில் கொடியேற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது! ஓயாமல் உழைத்த தலைவர் கலைஞரின் வழித்தடத்தில், நானும் ஓயாமல் உழைக்கிறேன். தலைவரான பிறகும் உழைக்கிறேன்... முதல்வரான பிறகும் உழைக்கிறேன்! அண்ணாவின் தம்பிக்குக் – கலைஞரின் உடன்பிறப்புக்கு ஓய்வும் இல்லை; சாய்வும் இல்லை என்ற எண்ணத்துடன் உழைக்கிறேன்! அதனால், இதுபோன்ற பிறந்தநாள் விழாக்கள் நெடுஞ்சாலைப் பயணத்தில் வரும் ஸ்பீட்–பிரேக் போல; ஒரு நிமிட ஓய்வு; அவ்வளவுதான்!**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பலகுரலரசு 'மிசா' முருகுபாண்டியன்

### மார்ச் 1 (2016)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் பணியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957இல் 'உதயசூரியன் நாடக மன்ற'த்தை தஞ்சையில் தொடங்கி 1000க்கும் மேற்பட்ட நாடகங்களையும், 40,000க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியவர்.

கழக மாநாடுகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போது பலகுரலில் பேசியதை கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு "பலகுரலரசு" எனும் பட்டம் அளித்து பாராட்டினார்..

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

"கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் என்னைவிட்டு எங்கும் செல்லாமல், எல்லா சோதனைகளின் போதும், வேதனைகளின் போதும் என்னுடனே இருந்து ஓங்கி ஒலித்த குரல், இந்த பலகுரல் தம்பி முருகுபாண்டியன்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**